R5223

# CROSS - BEARING THE WAY OF GROWTH
# சிலுவை சுமத்தல் வளர்ச்சிப் பாதை

''தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின் செல்லாதவன் எனக்கு சீஷனாயிருக்க மாட்டான்.'' – லூக்கா 14:27

ஒரு சீஷன் என்றால் ஒரு போதகரையோ அல்லது வழிகாட்டியையோ பின்பற்றும் ஒரு மாணவன். கர்த்தர் தமது சீஷர்களுக்கு மாபெரும் ஆசீர்வாதங்களை வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். அவர்கள் கீழ்ப்படிதலுள்ளவர்களாக இருந்தால் நித்திய ஜீவனால் பெரிதும் ஆசீர்வதிக்கப்படுவர்கள். அவரது சிங்காசனத்தில் அவரோடு கூட உட்காருவார்கள். அவர் எங்கே இருப்பாரோ அங்கே அவரோடு கூட இருப்பார்கள்.

ஆகையால் இந்த சீஷத்துவத்தில் என்னவெல்லாம் சம்பந்தப்பட்டுள்ளன என்ற முக்கியமான கேள்வி உண்டாகிறது. இது சுலபமான காரியமா அல்லது கஷ்டமானதா? கர்த்தர் இங்கேயும் மற்ற இடத்திலும் அதன் நிபந்தனைகளை நமக்கு சொல்லுகிறார். இன்னொரு வசனத்தில் அவர் கூறுகிறதாவது: ''ஒருவன் என்னை பின்பற்றி வரவிரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னை பின்பற்றக்கடவன்,'' ''தன் சிலுவையை சுமந்து கொண்டு எனக்குப்பின் செல்லாதவன் எனக்கு சீஷனாயிருக்கமாட்டான்.'' (மத்தேயு 16 : 24; லூக்கா 14 : 27)

ஆகையால் இந்த காரியத்தில் நிச்சயமாக ஒரு செயல்முறை உண்டு. முதலில் ஒருவன் சீஷத்துவம் என்றால் என்ன மற்றும் சிலுவை என்ன என்பதைப் பார்க்க வேண்டும். சிலர் மற்றவர்களைக் காட்டிலும் வித்தியாசமாக உணர்கிறார்கள். சிலுவையை எடுப்பது சிலருக்கு மிகவும் கடும் சோதனையாக இருக்கும். இதன் முக்கியத்துவத்தை சிலர் தங்கள் கருத்தின் மூலமாக தீர்மானிக்கிறார்கள்; மற்றவர்கள் அனுபவத்தின் மூலம் தீர்மானிக்கிறார்கள்.

கடைசி வரை செல்ல வேண்டும் என்று நாம் தீர்மானிக்கவில்லை என்றால் சிலுவையை எடுக்காமல் இருப்பது நல்லது என்று கர்த்தர் கூறினார். அவர் இப்படியாக விளக்குகிறார். ''கலப்பையின் மேல் தன் கையை வைத்து பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்கு தகுதியுள்ளவன் அல்ல என்றார்.'' (லூக்கா 9 : 62)

கர்த்தருடைய சீஷர்களாக ஆகிறவர்களுக்கு சிலுவையானது எதைக் குறிக்கும் என்பதை அவர் மிகவும் தெளிவாக கூறினார். அவருடைய சீஷர்கள் யாராயிருந்தாலும் துன்பப்படுவார்கள் என்று அவர் கூறுகிறார். சிலுவை சுமப்பது என்பது ஒரு கடினமான காரியம் என்று அவர் எச்சரித்தார். ஆகையால் நீங்கள் அவரது சீஷராக வேண்டும் என்று தீர்மானித்தால், நீங்கள் உட்கார்ந்து, செல்லும் செலவை கணக்குப் பார்க்க வேண்டும். சிலுவையை நீங்கள் எடுத்தால், அது வெறும் தூக்குவது மாத்திரமல்ல, மரணம் வரை விசுவாசத்துடன் சுமக்க வேண்டும்.

## சிலுவை சுமத்தலை எது அமைக்கிறது?

சத்தியத்தை அறிகிற அறிவை அடைந்த பின்பு தான் சிலுவையை எடுத்தல் நடைபெறுகிறது. உலகமானது சிலுவையை எடுப்பதே இல்லை. தனது சொந்த சித்தத்தை உடையவர்களும் சிலுவையை தொடர்ந்து சுமப்பதில்லை. மனிதர்களில் அநேகர் கூறுவதாவது: ''நான் திருமணம் ஆனதிலிருந்து நான் எனது மனைவியினால் சிலுவையை பெற்றிருக்கிறேன்.'' அதே போல் மனைவிகளும் தங்களது கணவனால் சிலுவையை பெற்றிருப்பதாக கூறுவார்கள். இவர்கள் சுமப்பது கிறிஸ்துவின் சிலுவையல்ல. விவாகத்தில் தவறான தீர்மானத்தால் துன்பப்படுகிறார்கள். ஜோடிகள் தவறாக இணைக்கப்படுகிறார்கள்.

எனினும் இப்படிப்பட்ட ஒன்று சிலுவை சுமத்தலாகிறது. கர்த்தரிடத்தில் விசுவாசமாயிருப்பதினால் கணவனாலோ அல்லது மனைவியினாலோ இந்த சிலுவை உருவாக்கப்பட்டால், இது கிறிஸ்துவினிமித்தமோ அல்லது சத்தியத்தினிமித்தமோ சகிக்க வேண்டிய சிலுவையாகும். வியாபார போட்டியாளர்கள் மூலமாக வருகிற எதிர்ப்புக்களை சகிப்பது, கிறிஸ்துவினிடத்தில் விசுவாசமாயிருப்பதினால் சிலுவை சுமத்தலின் ஒரு பகுதியாகும். ஒரு வேளை இது நமக்கு நன்மையாக இருக்கிறது. ஏனெனில் ''சிலுவை என்பது என்ன என்று எல்லா நேரங்களிலும் நாம் காண்பதில்லை.''

''நமக்கு என்ன காத்திருக்கிறது என்பதை நாம் அறியோம்.
தேவன் அன்புடன் நமது கண்களை மறைக்கிறார்.
நாம் முன்னேறிச் செல்லும் பாதையின் ஒவ்வொரு
அடியிலும் அவர் புதிய காட்சிகளை எழும்புபடிச் செய்கிறார்.''

சிலுவை என்ன என்பதை நாம் அறியாதிருக்கும் வரை, நம்மால் சிலுவையை எடுக்க முடியாது: சிலுவையை எடுப்பதில் ஈடுபட்டு கிறிஸ்துவின் சீஷனாக முடியாது. சிலுவையை நாம் எடுத்த பிறகு நாம் அதை சுமக்க வேண்டும் என்று நமது கர்த்தர் சொல்லுகிறார். அதை சுமத்தல் என்பது அதை விட்டு ஓடிவிடுவதோ அல்லது அதனால் எச்சரிக்கை பெறுவதோ அல்ல. சிலுவையை சுமத்தல் என்பது அதை சகிப்பது. போதனைகளை இந்த கோணத்தில் நாம் கடைபிடிக்க வேண்டும்.

நமது கர்த்தர் சொல்லுகிறதாவது: ''ஒரு பட்டணத்தில் உங்களை துன்பப்படுத்தினால் மறு பட்டணத்திற்கு ஓடிப் போங்கள்.'' விசுவாசமுள்ளவர்கள் எவர்களோ அவர்கள் துன்பப்படுவார்கள். ஆகையால் நமக்கு எதிர்ப்பு இல்லாமல் இருப்பது, நமது தேவனால் தயவு பெற்றவர்கள் அல்ல என்பதற்கும் நம்மை அவர் தமது பிள்ளையாக கருதி தொடர்பு கொள்ளவில்லை என்பதற்கும் நிரூபணமாகும். தேவன் யாருடன் தம்முடைய பிள்ளைகளாக கருதி தொடர்பு கொள்ளுகிறாரோ, அவர்கள் ராஜரீக ஆசாரியர்களாகி அவரது மகிமையான ராஜ்யத்தில் பங்கு பெறுவார்கள். வருகிற கஷ்டங்களிலிருந்து யார் ஓட நினைக்கிறார்களோ அவர்கள் தவறு செய்கிறார்கள்.

## சோதனைகளால் நோக்கம் நிறைவேற்றப்படுகிறது

பிறகு இந்த சோதனைகளிலிருந்து விடுதலை பெறுவது எப்படி? இந்த சகிப்பினால் சத்திய சேவையை நிறைவேற்றவில்லை என்றாலொழிய, நாம் அந்த சோதனைகளிலிருந்து விடுதலை பெற நாடக்கூடாது. பிறகு தேவன் வேறு ஒரு கதவை திறப்பாரா என்பதை நாம் தேட வேண்டும். உதாரணத்திற்கு ஒருவர் தான் நல்லது எதுவும் செய்யாமல் வெறும் துன்பம் மட்டும் அனுபவிப்பதாகக் கண்டால், அவர் தேவனிடம் தாம் என்ன செய்ய வேண்டும் என்பதை ஜெபத்தில் கேட்பாராக. ஒரு வேளை

தேவன் அதிலிருந்து தப்பிக்கும்படியான ஒரு பாதையை திறக்கலாம். நாம் மாம்சீக சரீரத்தை விடும்வரை, நமது சோதனைகளையும் அபூரணங்களையும் விட்டு விட கூடாது. ஏனெனில் உலகத்தின் மார்க்கம் நீதிக்கு புறம்பாயிருக்கிறது. முழு உலகமும் அறியாமை, மூட நம்பிக்கை மற்றும் குருட்டுத்தனத்தினால் வழி விலகியிருக்கிறது. அவர்களுக்கிடையே நம்மை அந்தகாரத்திலிருந்து ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவரின் போற்றுதல்களை காண்பிக்கவும் நாம் கடினமாக உழைக்க வேண்டும்.

நமது வசனம் கர்த்தரை பின்பற்ற வேண்டும் என்று விசேஷமாக வலியுறுத்திக் கூறுகிறது. சிலுவையை எடுத்தல், அர்ப்பணம் செய்த தேவனுடைய பிள்ளைகளுக்கு குணலட்சணங்களை அபிவிருத்தி செய்யும் வழியாகும். சோதனைகளோ துன்பங்களோ நமக்கு வரவில்லை என்றால், சத்தியம் மற்றும் கர்த்தரின் நமது ஊழியத்தில் நமது விருப்பம் மற்றும் பசியில் இடையூறேஇல்லையென்றால்நாம்ஏதோதவறுசெய்கிறோம் என்பதை நாம் நிச்சயப்படுத்திக் கொள்ளலாம். நாம் அவருடைய சீஷனாகவில்லை.

ஆனால் இந்த சோதனைகளை நாம் பெற்றோமானால், அதை நாம் அதிசீக்கிரத்தில் நீங்கும் லேசான உபத்திரவம் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். இவைகள் “நமக்கு மிகவும் அதிகமான நித்திய கன மகிமையை உண்டாக்குகிறது.” நாம் தற்காலத்தில் நோக்குவது, காணப்படுகிறவைகளையோ, பூமிக்குரிய புகழ்ச்சியையும், மகிமையுமோ அல்ல. ஆனால் பரத்துக்குரியவைகளை கர்த்தரிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு அவர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறவைகளை ஆகும். (2 கொரிந்தியர் 4:17, 18)